**டிசம்பர் – 12**

# TNPSC துளிகள்

- பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கத்தின் (BNHS) அறிவியலாளர் ஃபர்வீன் ஷேக், 2025 ஆம் ஆண்டு சரணாலய வனவிலங்கு சேவை விருதை வென்றுள்ளார்.
- மாலத்தீவில் நடைபெற்ற 7வது கேரம் உலகக் கோப்பைப் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் தமிழ்நாட்டின் L. கீர்த்தனா தங்கப் பதக்கத்தினை வென்று உள்ளார்.
- FIDE சர்க்யூட் 2025 போட்டியில் வென்ற பிறகு, கேண்டிடேட்ஸ் 2026 போட்டிக்குத் தகுதி பெற்ற முதல் இந்தியச் சதுரங்க வீரர் என்ற பெருமையை கிராண்ட் மாஸ்டர் R. பிரக்ஞானந்தா பெற்றுள்ளார்.
- 2014 ஆம் ஆண்டு SEBI விதிமுறைகளின் கீழ், ராஜ்மார்க் இன்ஃப்ரா இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்டை (RIIT) உள்கட்டமைப்பு முதலீட்டு அறக்கட்டளையாக (InvIT) பதிவு செய்வதற்கு இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) முதன்மை ஒப்புதலை வழங்குகிறது.
- டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் (TASL) மற்றும் லாக்ஹீட் மார்டின் ஆகியவை பெங்களூருவில் C-130J சூப்பர் ஹெர்குலஸ் விமானத்திற்கான அதிநவீன பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு (MRO) மையத்தினை கட்டமைக்கத் தொடங்கியுள்ளன.
- 15வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் (2026-2030) சீனாவின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு குறித்த ஒரு கருத்தரங்கிற்கு சீன அதிபர் ஜி ஜின்பிங் தலைமை தாங்குகிறார்.
- வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் நுண்ணுயிர்த்தின்னி ஆராய்ச்சி மற்றும் நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பு குறித்த ஆறாவது சர்வதேச மாநாடு நிறைவடைந்தது.
- சத்தீஸ்கரின் பிஜாப்பூரில் உள்ள கொண்டப்பள்ளி கிராமம் ஆனது 2025 ஆம் ஆண்டில் முதல் முறையாக கைபேசி சேவை இணைப்பு மற்றும் மின்சாரத்தைப் பெற்றது.
  - முதல் கைபேசி சேவை கோபுரம் (ஜியோ) 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், தற்போது 60% வீடுகளில் கைபேசிகள் உள்ளன.
- நிலத்தடி அமைப்புகளைக் கண்டறிந்து வரைபடமாக்குவதற்கு முப்பரிமாண நிலப் பரப்பு ஊடுருவும் ரேடார் (GPR) கருவியைப் பயன்படுத்தும் இந்தியாவின் முதல் முப்பரிமாண அடிப்பரப்பு வரைபடமாக்கல் தளத்தை ஜெனீசிஸ் இன்டர்நேஷனல் அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இது மும்பை, திருவனந்தபுரம், லக்னோ, ஜெய்ப்பூர், கௌஹாத்தி மற்றும் அகமதாபாத்தில் உள்ள அதானி குழும விமான நிலையங்களில் பயன்படுத்தப் படும்.
- ஆனந்த் அம்பானி உலக மனிதச் சமூக அமைப்பிடமிருந்து உலக மனிதாபிமான விருதைப் பெற்று, இந்த விருதைப் பெற்ற இளம் மற்றும் முதல் ஆசியர் என்ற பெருமைக்குரியவர் ஆனார்.
  - முன்னோடிகரமான முயற்சியான வன்தாரா மூலம் வனவிலங்கு மீட்பு மற்றும் வளங்காப்பில் அவர் ஆற்றிய தலைமைத்துவத்தினை இந்த விருது

அங்கீகரிக்கிறது.

- வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவிப்பதற்காக டிசம்பர் 09 ஆம் தேதியன்று சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் அனுசரிக்கப் படுகிறது.
  - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Uniting with Youth Against Corruption: Shaping Tomorrow's Integrity" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மகளிர் விடுதிகளுக்கான புதிய விதிகள்




- தமிழ்நாடு அரசானது 2015 ஆம் ஆண்டு மகளிர் மற்றும் சிறார்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குமுறை) விதிகளைத் திருத்தியமைத்தது.
- இது ஒரு பெண்ணுக்கான சராசரி இட (பரப்பு) ஒதுக்கீட்டை 120 சதுர அடியிலிருந்து 50 சதுர அடியாகக் குறைத்தது.
- இந்த விதிகள் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறார்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் செயல்படுகின்றன.
- 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில், அரசு உரிம நடைமுறையை திருத்தியமைத்தது என்பதோடு இதன் மூலம் மாவட்ட ஆட்சியரிடம் 10,000 ரூபாய் கட்டணத்துடன் இயங் கலை விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
- ஆவணங்கள் சரி பார்த்த பிறகு உரிமங்கள் தானாக உருவாக்கப்படும் என்பதோடு மேலும் அது 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்.
- இந்த விதிகள் ஆனது அரசு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தனியார் அமைப்புகள், சமய நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களால் நடத்தப் படும் விடுதிகள், இல்லங்கள் மற்றும் தங்குமிட வசதிகளுக்குப் பொருந்தும்.

## அயல் ஊடுருவல் உயிரினங்களை ஒழித்தல் - சென்னா ஸ்பெக்டபிலிஸ்

- 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் ஒவ்வொரு வனப் பிரிவிலிருந்தும் சென்னா ஸ்பெக்டபிலிஸை அகற்றுவதற்காக தமிழ்நாடு அரசானது நாட்டின் மிகப்பெரிய ஒழிப்பு முயற்சிகளில் ஒன்றை மேற்கொண்டு வருகிறது.
- சென்னா ஸ்பெக்டபிலிஸ் என்பது ஃபேபேசியே குடும்பத்தைச் சேர்ந்த ஓர் ஊடுருவல் சார்ந்த, வேகமாக வளரும் மஞ்சள் நிற பூக்கும் மரமாகும்.

- இது தெற்கு மற்றும் மத்திய அமெரிக்காவை தாயகமாகக் கொண்டது என்பதோடு மேலும் இது நீலகிரி, முதுமலை மற்றும் சத்தியமங்கலம் உள்ளிட்ட மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சில பகுதிகளில் அதிகளவில் பரவிக் காணப்படுகிறது.
- வறண்டது முதல் ஈரப்பதமான இலையுதிர் காடுகளில் செழித்து வளர்கின்ற இது ஏராளமான விதைகள் மூலம் விரைவாகப் பரவுகிறது என்பதோடு இது அடர்த்தியான ஒரு பயிர்ப் பரவலை உருவாக்குகிறது.
- இது பல்லுயிரியலைக் குறைப்பதன் மூலமும், வன மீளுருவாக்கத்தைக் குறைப்பதன் மூலமும், தீ பரவும் அபாயத்தை அதிகரிப்பதன் மூலமும், வனவிலங்குகளுக்கான தீவனத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது.




## தேசியச் செய்திகள்

### மாநில வழக்குரைஞர் கழகங்களில் பெண்களுக்கான ஒதுக்கீடு




- அனைத்து மாநில வழக்குரைஞர் கழகத் தேர்தல்களிலும் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீட்டை உறுதி செய்யுமாறு இந்திய வழக்குரைஞர் கழகத்திற்கு (BCI) உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- இந்த ஆண்டு, 20% இடங்கள் ஆனது தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்கள் மூலம் நிரப்பப் படும் என்ற நிலையில் மேலும் 10% இடங்கள் கூட்டுத் தேர்வு (தேர்தல்

இல்லாமல் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது) மூலம் நிரப்பப்படும்.

- ❖ தேர்தல்கள் இன்னும் அறிவிக்கப்படாத மாநில வழக்குரைஞர் கழகங்களுக்கு இந்த உத்தரவு பொருந்தும்.
- ❖ இந்திய வழக்குரைஞர் கழகம் கூட்டுத் தேர்விற்கான முன்மொழிவைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ வரவிருக்கும் வழக்குரைஞர் கழக அமைப்புகளில் பெண்களின் குறைந்தபட்ச கட்டாய பிரதிநிதித்துவத்தை இந்த உத்தரவு உறுதி செய்கிறது.

## விமானப் பணிகளுக்கான நேர வரம்பு விதிமுறைகள்




- ❖ விமானப் பணிகளுக்கான திருத்தப்பட்ட நேர வரம்பு (FDTL) விதிகள் வெளியிடப்பட்ட பிறகு, இண்டிகோ பெருமளவிலான விமான ரத்துகளை எதிர் கொண்டது என்ற நிலையில், இது பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) தற்காலிக விலக்குகளை அமல் செய்ய தூண்டியது.
- ❖ விமானிகளின் சோர்வைத் தடுக்க, பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) விதித்துள்ள பாதுகாப்பு விதிமுறைகள் FDTL விதிமுறைகள் ஆகும்.
- ❖ திருத்தப்பட்ட விதிகளில் வாரத்திற்கு 48 மணி நேர ஓய்வு, அதிகபட்சமாக 2 இரவுகள் தரையிறங்குதல் மற்றும் தொடர்ச்சியாக 2 இரவுகளுக்கு மேல் பணிகள் இருக்கக் கூடாது ஆகிய விதிகள் அடங்கும்.
- ❖ பொது விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் உள்ள DGCA, விமானப் பாதுகாப்பை ஒழுங்குபடுத்துகிறது, விமானிகளுக்கு உரிமம் வழங்குகிறது மற்றும் சர்வதேச தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்கிறது.
- ❖ பயணிகள் போக்குவரத்து மற்றும் விமான நிலையங்களின் விரைவான வளர்ச்சியுடன், 7.7 மில்லியனுக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை ஆதரிக்கும் 3வது

பெரிய உள்நாட்டு விமானச் சந்தையாக இந்தியா உள்ளது.

## வரைவு இந்தியப் புள்ளியியல் நிறுவன மசோதா, 2025




- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI), இந்தியப் புள்ளியியல் கல்வி நிறுவன (ISI) மசோதா, 2025 வரைவை வெளியிட்டது.
- இது ISI நிறுவனத்தினைப் பதிவு செய்யப்பட்ட சமூகத்திலிருந்து ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ISI ஆனது கொல்கத்தாவில் P.C. மஹாலனோபிஸ் அவர்களால் 1931 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இது புள்ளிவிவரங்கள், கணிதம், பொருளாதாரம், கணினி அறிவியல் மற்றும் தொடர்பு உடைய துறைகளில் இளங்கலை மற்றும் முதுகலை கல்விப் படிப்புகளை வழங்கும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனமாகும்.
- இந்த மசோதா அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்டவர்களைக் கொண்ட ஆளுநர் குழுவிற்கு அதிகாரத்தை வழங்கி, ஆசிரியர் மற்றும் கல்வித் துறை சார் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கிறது.
- 29வது பிரிவானது மாணவர் கட்டணம், ஆலோசனை மற்றும் உதவித்தொகை சார்ந்த ஆராய்ச்சி மூலம் வருவாய் ஈட்ட அனுமதிக்கிறது என்ற நிலையில் இது அடிப்படை ஆராய்ச்சிக்கான நிதி குறித்த கவலைகளை எழுப்புகிறது.
- முந்தைய ஆசிரியர் மற்றும் பணியாளர் பிரதிநிதித்துவ விதிமுறையை நீக்கி, ISI நிறுவனத்தில் உள்ள அனைத்து நியமனங்களும் தற்போது மத்திய அரசால் கட்டுப்படுத்தப் படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## தேசிய அவசரநிலை – லிதுவேனியா





- பெலாரஸிலிருந்து வரும் தொடர் பலூன் ஊடுருவல்களுக்குப் பிறகு லிதுவேனியா தேசிய அவசரநிலையை அறிவித்தது.
- இந்த பலூன்கள் விமானப் போக்குவரத்தை சீர்குலைத்து, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் எல்லை சார் பாதுகாப்பை அச்சுறுத்தின.
- பலூன் ஊடுருவல் சம்பவங்கள் காரணமாக வில்னியஸ் விமான நிலையம் பல முறை மூடப் பட்டது.
- இராணுவம், காவல்துறை, எல்லைப் பாதுகாப்பு படைகள் மற்றும் உளவுத்துறை பிரிவுகள் விரிவாக்கப்பட்ட அதிகாரங்களுடன் செயல்பட அனுமதிக்க அரசாங்கம் பாராளுமன்ற ஒப்புதலை நாடுகிறது.
- ஐரோப்பிய ஒன்றியம் (EU) இந்த ஊடுருவல்களை லிதுவேனியாவிற்கு எதிரான கலப்பு முறைத் தாக்குதல் என்று விவரித்தது.

## TRaNJA முன்னெடுப்பு

- உலக வர்த்தக அமைப்பின் (WTO) சீர்திருத்தத்தை ஊக்குவிப்பதற்காக CUTS இன்டர்நேஷனல் அமைப்பானது TRaNJA முன்னெடுப்பினைத் தொடங்கியது.
- TRaNJA என்பது Trade Not Just Aid: Winners and Losers in the World Trade Organization என்பதைக் குறிக்கிறது.
- இந்த முன்னெடுப்பு நியாயமான மற்றும் விதி அடிப்படையிலான உலகளாவிய வர்த்தக அமைப்பாக WTO அமைப்பின் பங்கை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த திட்டம் சான்றுகள் அடிப்படையிலான பேச்சுவார்த்தை, உள்ளடக்கிய வர்த்தகத்தை ஊக்குவித்தல், டிஜிட்டல் வர்த்தகம் மற்றும் பருவநிலை பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

- உலகளாவிய வர்த்தகத்தில் சுமார் 70% ஆனது இன்னும் WTO விதிகளின் கீழ் செயல் படுவது சீர்திருத்தத்திற்கான முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.




## GNLC வலையமைப்பில் உள்ள சவுதி நகரங்கள்




- யுனெஸ்கோ அமைப்பானது ரியாத், அல்உலா மற்றும் ரியாத் அல்-கப்ரா ஆகிய நகரங்களை உலகளாவியக் கற்றல் நகரங்களின் வலையமைப்பில் (GNLC) சேர்த்து உள்ளது.
- உலகளாவியக் கற்றல் நகரங்களின் வலையமைப்பு (GNLC) என்பது அனைத்து வயதினருக்கும் வாழ்நாள் முழுவதுமான கற்றலை ஊக்குவிக்கும் ஒரு சர்வதேச வலை அமைப்பாகும்.
- 2013 ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த வலையமைப்பு தற்போது 91 நாடுகளைச் சேர்ந்த 425 நகரங்களை உள்ளடக்கியுள்ளது.
- இந்தச் சேர்த்தல்களுடன், சவுதி அரேபியா தற்போது உலகளாவிய கற்றல் நகரங்களின் வலையமைப்பில் (GNLC) மொத்தம் எட்டு நகரங்களைக் கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## உலகின் மிகப்பெரிய விரைவான பண வழங்கீட்டு அமைப்பு - UPI

- இந்தியாவின் ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) ஆனது, பரிவர்த்தனை அளவின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய சில்லறை விற்பனைக்கான விரைவான பண வழங்கீட்டு அமைப்பாக சர்வதேச நாணய நிதியத்தால் (IMF) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ACI வேர்ல்ட் வைடு அமைப்பின் 2024 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, உலகளாவிய நிகழ்நேரப் பண பரிவர்த்தனைகளில் UPI 49% பங்கினைக் கொண்டுள்ளது.
- அரசாங்கம், RBI மற்றும் இந்தியத் தேசியக் கொடுப்பனவு கழகம் (NPCI) ஆகியவை BHIM-UPI பரிவர்த்தனைகள் மற்றும் பண வழங்கீட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (PIDF) ஆகியவற்றிற்கான ஊக்கத் தொகைகள் மூலம் டிஜிட்டல் பண வழங்கீடுகளை ஊக்குவிக்கின்றன.
- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி நிலவரப்படி, மூன்று முதல் ஆறாம் நிலை மையங்களில் சுமார் 5.45 கோடி டிஜிட்டல்சார் முனையங்கள் நிறுவப்பட்டன என்ற நிலையில் மேலும் 56.86 கோடி QR குறியீடுகள் 6.5 கோடி வணிகர்களை அடைந்தன.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## கிரேட் நிக்கோபார் தீவில் ஒநாய் பாம்பு இனம்

- இந்தியாவின் நிக்கோபார் தீவுகளில் புதிய பாம்பு இனங்கள் கண்டுபிடிக்கப் பட்டு உள்ளன.
- வனவிலங்கு நிபுணர் ஸ்டீவ் இர்வினை கௌரவிக்கும் வகையில் ஆராய்ச்சியாளர்கள்

இதற்கு லைகோடன் இர்வினி என்று பெயரிட்டுள்ளனர்.

- விஷமற்றதாகத் தோன்றுகின்ற இந்த இனம் முதன்மையாக சிறிய ஊர்வனவற்றை உண்கிறது.
- அறிவியலாளர்கள் இந்தியாவில் உள்ள கிரேட் நிக்கோபார் தீவில் மட்டுமே இந்தப் பாம்பைக் கண்டுபிடித்துள்ளனர்.




## இராட்சத குச்சிப் பூச்சி - ஆஸ்திரேலியா





- தொலைதூர வடக்கு குயின்ஸ்லாந்தில் உள்ள வெப்பமண்டல மழைக் காடுகளில் ஒரு புதிய வகை இராட்சத குச்சிப் பூச்சியான அக்ரோபில்லா ஆல்டா கண்டறியப்பட்டு உள்ளது.
- 44 கிராம் வரையில் எடையுள்ள இது ஆஸ்திரேலியாவின் கனமான பூச்சி என்று நம்பப்

படுகிறது.

❖ பாஸ்மிட்கள் (குச்சி மற்றும் இலை பூச்சிகள்) ஆனது செயல்பாட்டில் இயற்கையின் தேர்வுக்கு ஒரு நம்பமுடியாத எடுத்துக்காட்டு ஆகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பயிர்த் தாளடி எரிப்பு நிலை குறித்த அறிக்கை 2025




❖ சுற்றுச்சூழல், நிலைத்தன்மை மற்றும் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மன்றம் (iFOREST) ஆனது வடமேற்கு இந்தியாவிற்கான 2025 ஆம் ஆண்டிற்கான பயிர்த் தாளடி எரிப்பு நிலை குறித்த அறிக்கையை வெளியிட்டது.

❖ இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் (IARI) உள்ள CREAMS (விண்வெளியில் வேளாண் சூழல் அமைப்பு கண்காணிப்பு மற்றும் மாதிரியாக்கத்திற்கான ஆராய்ச்சி கூட்டமைப்பு) நடத்தும் இந்தியாவின் கண்காணிப்பு அமைப்பு, பல வேளாண் நிலம் சார் எரிப்புகளைத் தவிர்க்கிறது.

❖ இந்த அமைப்பு ஆனது முக்கியமாக இரண்டு துருவ-சுற்றுப்பாதை செயற்கைக்கோள் உணர்வுக் கருவிகளை சார்ந்துள்ளது:

  ○ மிதமான தெளிவுத்திறன் கொண்ட வரைபடமாக்க நிறமாலை கதிர் வீச்சளவி / ஸ்பெக்ட்ரோ ரேடியோமீட்டர் (MODIS) மற்றும்

  ○ புலனாகும் அகச்சிவப்பு வரைபடமாக்க கதிர்வீச்சுமானி தொகுப்பு (VIIRS).


❖ MODIS மற்றும் VIIRS ஆகியவை காலை 10:30 மணி முதல் பிற்பகல் 1:30 மணி வரை மட்டுமே எரிப்பு சார்ந்த பதிவுகளைப் பதிவு செய்கின்றன என்ற நிலையில் இது பெரும்பாலான பிற்பகல் எரிப்புகளைத் தவறவிடுகிறது.

❖ சுழற்சி மேம்படுத்தப்பட்ட புலனாகும் மற்றும் அகச்சிவப்பு வரைபடமாக்க கருவியின் (SEVIRI) 15 நிமிட தரவு, 2024–2025 ஆம் ஆண்டில் பஞ்சாபில் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட பெரிய எரிப்புகள் பிற்பகல் 3:00 மணிக்குப் பிறகு நிகழ்ந்ததாகக் காட்டுகிறது.

❖ ஹரியானாவில், பெரும்பாலான பெரிய எரிப்புகள் 2019 முதல் பிற்பகல் 3:00 மணிக்குப் பிறகு நிகழ்ந்து வருகின்றன என்பதோடு அது பல ஆண்டுகளாக குறைத்து மதிப்பிடப் பட்டு வருவதாக உள்ளது.

- சென்டினல்-2 பன்நிறைமாலை கருவி (MSI) எரிப்பு பதிவான பகுதியின் வரைபடமாக்கல் பஞ்சாபின் எரிப்பு பகுதி 31,447 கிமீ$^2$ (2022) அளவிலிருந்து சுமார் 20,000 கிமீ$^2$ (2025) ஆகக் குறைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.
- ஹரியானாவின் எரிப்புப் பகுதி 11,633 கிமீ$^2$ (2019) என்ற அளவிலிருந்து 8,812 கிமீ$^2$ (2025) ஆகக் குறைந்துள்ளது, ஆனால் நிலையான சரிவு இல்லாமல் ஏற்ற இறக்கமாக உள்ளது.
- உண்மையான எரிப்புப் பகுதியின் குறைவானது (25–35%) செயலில் உள்ள எரிப்புப் நிகழ்வு எண்ணிக்கையால் (>90%) வழங்கப்பட்ட குறைப்புகளை விட மிகக் குறைவு ஆகும் என்பதோடு இது முக்கியக் கண்காணிப்பு இடைவெளிகளை நிரூபிக்கிறது.

## உலகளாவிய பொது சுகாதார சேவைப் பரவலின் நிலை 2025





- “உலகளாவிய சுகாதார சேவை வழங்கலின் பரவலைக் கண்காணித்தல் (UHC): 2025 உலகளாவிய கண்காணிப்பு அறிக்கை” என்ற அறிக்கையானது உலக வங்கி குழுவால் வெளியிடப்பட்டது.
- உலகளவில் 10 பேரில் ஒருவர் தீவிர வறுமை கோடான, ஒரு நாளைக்கு 3 டாலருக்கும் குறைவான பணத்தைக் கொண்டு வாழ்கின்றனர்.
- உலகளாவிய UHC சேவை பரவல் குறியீடு (SCI) 2000 ஆம் ஆண்டில் 54 ஆக இருந்து 2023 ஆம் ஆண்டில் 71 ஆக உயர்ந்தது.
- தனது வருவாயிலிருந்து (OOP) மேற்கொள்ளும் சுகாதார செலவுகள் காரணமாக நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் மக்களின் பங்கு 2000 ஆம் ஆண்டில் 34 சதவீதத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டில் 26% ஆகக் குறைந்தது.
- UHC சேவை வழங்கலில் முன்னேற்றம் ஆனது 2015 ஆம் ஆண்டு முதல் மெதுவாக உள்ளது.
- சேவைப் பரவல் குறியீடு (SCI) ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் 74 அளவினை மட்டுமே எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இது உலக மக்கள்தொகையில் 24% பேர் இன்னும் சுகாதாரம் தொடர்பான நிதி நெருக்கடியை எதிர்கொள்ள செய்யும்.
- தொற்று நோய்க் கட்டுப்பாட்டில் சுகாதார சேவை வழங்கலின் பரவல் முக்கியமாக மேம்பட்டுள்ளது.

- இனப்பெருக்கம், பேறு காலம், பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை சுகாதார (RMNCH) சேவைகள் குறைந்தபட்ச ஆதாயங்களைக் கண்டன.
- தொற்று அல்லாத நோய்கள் (NCDs) மிகக் குறைந்த அளவில் சேவை வழங்கப்படும் களமாகவே உள்ளன.
- ஏழ்மை நிலையில் உள்ள மக்கள் இன்னும் OOP சுகாதார செலவினங்கள் காரணமாக விகிதாசார அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

# முக்கிய தினங்கள்

## இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களின் சர்வதேச நினைவு தினம் 2025 - டிசம்பர் 09

- இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட அனைவரையும் கௌரவித்து நினைவு கூர்வதும், உலகளாவிய தடுப்பு முயற்சிகளை ஊக்குவிப்பதும் இந்த நாளின் நோக்கம் ஆகும்.
- இந்த நாள் முதன்முதலில் 2015 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையால் அனுசரிக்கப் பட்டது.
- இனப்படுகொலையை வரையறுக்கும் மற்றும் அதைத் தடுக்கவும் தண்டிக்கவும் உலக நாடுகளுக்கு கடமை நிர்ணயிக்கும் 1948 ஆம் ஆண்டு ஐ.நா. இனப்படுகொலை உடன்படிக்கையுடன் இந்த நாள் ஒத்துப் போகிறது.
- இனப்படுகொலை என்பது ஒரு தேசிய, இனக்குழு, இன அல்லது மதக் குழுவை அழிக்கும் நோக்கத்துடன் செய்யப்படும் செயல்களை உள்ளடக்கியது, இதில் கொலை, தீங்கு விளைவித்தல் மற்றும் குழந்தைகளை வலுக்கட்டாயமாக இடம் மாற்றுதல் ஆகியவை அடங்கும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★